**23 பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சைதாப்பேட்டை, சென்னை – 15**

**முன்னிலை : திருமதி. கே.ஆர். பத்மகுமாரி, பி.ஏ.,எல்எல்எம்.,**
**பிஜிடி.ஏ.டி.,ஆர்.,**
**23 வது பெருநகர குற்றவியல் நடுவர்**

**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02 ம் நாள் வியாழக்கிழமை**

**வருடாந்திர வழக்கு எண் 2751/2025**

**CNR No. TNCH0C-028828-2025**

**தீர்ப்புரை**

1. **வழக்கு வரிசை எண் :** 2751/2025

2. **சம்பவ நாள் :** 06.04.2025

3. **முறையிடுபவர் :** தமிழ்நாடு மாநில அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
ஆர் 6 குமரன் நகர் காவல் நிலையம்
சென்னை– 83.
குற்ற எண்: 95/2025

4. **எதிரியின் பெயர் மற்றும் முகவரி**

**கணேஷ்,**
த/பெ. இளையவாணன்,
எண். 37, Y பிளாக், ஆர் வி நகர்,
ஜாபர்கான்பேட்டை, சென்னை–83.

5. **முறையீடு செய்யப்பட்ட குற்றம் :**

இவ்வழக்கின் எதிரி, சாட்சி–1 ன் கடையில் வாட்டர் பாட்டில் மற்றும் முறுக்கு வாங்கிவிட்டு, சாட்சி–1 பணம் கேட்ட போது, எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியை காட்டி சாட்சி–1 யை பார்த்து அசிங்கமாக திட்டி, கடையில் இருந்த பொருட்களை கீழே தள்ளி சேதப்படுத்தி, சாட்சி–1 யை வழிமறித்து, கல்லாவில் இருந்த பணம் ரூ.500/–யை எடுத்துக்கொண்டு, கூல்ட்ரிங்ஸ் பாட்டில்களை ரோட்டில் போட்டு உடைத்து, கத்தியை காட்டி

கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரியின் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

**6. எதிரியின் வாதுரையும், அவரது விசாரணையும் :**

இறுதியறிக்கையின் படி முகாந்திரம் இருந்ததால் இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டு, எதிரி முன்னிலையாகி அவருக்கு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் பிஎன்எஸ்எஸ் பிரிவு 230ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, எதிரியின் மீது பிஎன்எஸ் பிரிவுகள் 296(பி), 126(2), 309(4), 125, 324(2), 351(3)ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினவிய போது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**7. முடிவான ஆணை** : எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்யப்படுகிறது.

**8. ஆணை பிறப்பிக்கப்பட்ட நாள்** : 02.04.2026

**9. இறுதியறிக்கையின் படி அரசுதரப்பு வழக்கின் சுருக்கமான காரணங்கள் :**

கடந்த 06.04.2025ம் தேதி இரவு 20.30 மணியளவில் ஆர் 6 குமரன் நகர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஏரிக்கரை தெருவில் உள்ள ஏவிஆர் டீஸ்டால் எண்.17, ஏரிக்கரை தெரு, ஜாபர்கான்பேட்டை சென்னை–83 என்ற கடையில் சாட்சி–1 அஜித்குமார் என்பவர் வியாபாரம் செய்துக்கொண்டிருந்த போது, இவ்வழக்கின் எதிரி சாட்சி–1ன் கடைக்கு வந்து வாட்டர் பாட்டில் மற்றும் முறுக்கு வாங்கிகொண்டு, சாட்சி–1 பணம் கேட்ட போது, எதிரி சாட்சி–1யை பார்த்து எங்கிட்டவே பணம் கேட்குறியே என்று கூறி, மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து சாட்சி–1யை பார்த்து தகாத வார்த்தையால் திட்டி, கத்தியை காட்டி மிரட்டி, சாட்சி–1ன் கடையில் இருந்த பொருட்களை எல்லாம் கீழே

தள்ளி சேதப்படுத்தி, சாட்சி–1யை வழிமறித்து தடுத்து நிறுத்தி, சாட்சி–1ன் கழுத்தில் கத்தியை வைத்து பணத்தை எடுடா என்று அச்சுறுத்தி, சாட்சி–1 உயிருக்கு பயந்து கல்லாவில் இருந்த பணம் ரூ.500/–எடுத்த போது அதை பிடுங்கிக்கொண்டு, நடந்த சம்பவத்தை பற்றி வெளியில் சொன்ன உயிரோடு விடமாட்டேன் என்று மிரட்டி, சாட்சி–1 உயிருக்கு பயந்து சத்தம் போடவே அங்கிருந்த பொதுமக்கள் சத்தம் கேட்டு எதிரியை பிடிக்க முற்பட்ட போது, எதிரி என்னை யாராவது பிடிக்க வந்தீங்கன்னா ஒருத்தனும் திரும்ப மாட்டிங்கன்னு மிரட்டி, சாட்சி–1ன் கடையில் இருந்த கூல்டிரிங்ஸ் பாட்டிலை எடுத்து ரோட்டில் வீசியடித்து பொதுமக்கள் உயிருக்கு அச்சத்தை ஏற்படுத்தி, கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக பிஎன்எஸ் பிரிவுகள் 296(பி), 126(2), 309(4), 125, 324(2), 311, 351(3) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக ஆர் 6 குமரன் நகர் காவல் நிலைய ஆய்வாளரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

**10. அரசுதரப்பு சாட்சியங்களிலிருந்து அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

**அ.சா–1** அஜித்குமார் சாட்சியத்தில் எதிரியை எனக்குத் தெரியாது, வழக்கு பற்றி எதுவும் தெரியாது, எதிரி மீது எந்த புகாரும் கொடுக்கவில்லை, வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று அரசு தரப்பு வழக்கை மறுத்து பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா–2** திருமதி. ஷகிலா ஷானி சாட்சியத்தில், காவல் ஆய்வாளர் ரமணி என்பவரின் கையெழுத்தை நன்கு அறிவேன், கடந்த 07.04.2025ம் தேதி காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது, அஜித்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று, வழக்கு பதிவு செய்து, எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, காவல் ஆய்வாளர் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக எடுத்துக்கொண்டு, சாட்சிகள் முன்னிலையில், சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து, இவ்வழக்கின் எதிரியை புழல் மத்திய சிறையில் வைத்து சம்பிரதாய கைது

செய்து, 28.04.2025ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு, சம்பவ இடத்தில் இருந்து உடைந்த கூல்டிரிங்ஸ் பாட்டிலை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி, கைப்பற்றிய வழக்கு சொத்தினை நீதிமன்றத்திற்கு படிவம் 95 மூலம் அனுப்பி வைத்து, வழக்கின் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்து, இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து, எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

11. இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டு எதிரிக்கு எதிரான அம்சங்கள் குறித்து பிஎன்எஸ்எஸ் பிரிவு 351ன் கீழ் கேள்விகள் கேட்கப்பட்ட போது எதிரி அவை பொய்சாட்சியம் என கூறினார். எதிரி தரப்பில் சாட்சியம் இல்லை என தெரிவித்தார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

12. அரசு தரப்பில் இந்த வழக்கு மெய்பிக்கப்பட்டு விட்டதாகவும், எனவே தகுந்த தண்டனை வழங்க வேண்டும் எனவும் வாதிடப்பட்டது. எதிரி தரப்பில் எதிரி மீதான குற்றம் அரசு தரப்பால் ஐயத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரி விடுதலை செய்யப்படவேண்டும் என வாதிடப்பட்டது.

13. <u>தீர்வு</u> :

அ.சா.1 சாட்சியத்தில் எதிரியை தெரியாது, வழக்கு பற்றி எதுவும் தெரியாது, எதிரி மீது காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை, வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரிக்கவில்லை என்று அரசு தரப்பு வழக்கை மறுத்து பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1யை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்தபோதிலும், அரசு தரப்பிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியத்தையும் அளிக்கவில்லை. எனவே இதர சாட்சிகள் தேவையில்லை என்று அரசு தரப்பில் விட்டொழிக்கப்பட்டுள்ளனர்.

**14.** எதிரி குற்ற செயலினை புரிந்தார் என அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் அமையாத காரணத்தினாலும், இவ்வழக்கின் எதிரி குற்றச்சம்பவத்தில் ஈடுபட்டதை நிரூபணம் செய்யும் வகையில், அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் அமையவில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. இவ்வழக்கின் விசாரணை அதிகாரியின் சாட்சியம் ஆகியவை எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் வகையில் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டினை சந்தேகங்களுக்கு அப்பாற்பட்ட வகையில் அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிக்கு கொடுத்து, எதிரியை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**15.** இறுதியாக அரசு தரப்பில் முன்வைக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் எதிரி மீது பிஎன்எஸ் பிரிவுகள் 296(பி), 126(2), 309(4), 125, 324(2), 351(3)ன் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து எதிரியை பிஎன்எஸ்எஸ் பிரிவு 271(1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. அவர் எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் மேல் முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் பி.எண். 1813/2025 ல் கைப்பற்றி தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தான உடைந்த கூல்ரிங்ஸ் பாட்டில் துண்டுகளை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பு என்னால் உதவியாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

/ஒப்பம்/ கே. ஆர். பத்மகுமாரி,

**23 வது பெருநகர குற்றவியல் நடுவர்,**
**சைதாப்பேட்டை, சென்னை – 15.**

<u>பின் இணைப்பு</u>

**அரசு தரப்பு சாட்சிகள் :**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.1 | அஜித்குமார் |
| 2. | அ.சா.2 | திரு. ஷகிலா ஷானி, காவல் உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | புகார் |
| 2. | அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை |
| 3. | அ.சா.ஆ.3 | பார்வை மகஜர் |
| 4. | அ.சா.ஆ 4 | மாதிரி வரைபடம் |
| 5. | அ.சா.ஆ 5 | கைப்பற்றுதல் மகஜர் |
| 6. | அ.சா.ஆ 6 | படிவம் 95 |
| 7. | அ.சா.ஆ 7 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | சா.பொ.1 | உடைந்த பாட்டில் துண்டுகள் |

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்**
**மற்றும் சான்று பொருட்கள் : இல்லை**

<u>குறிப்பு</u> :

1. தீர்ப்பு பற்றிய விவரம் காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி வேறு வழக்கில் சிறையில் இருந்தார்.
3. இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் மூன்று வாய்தாவிற்கு மேல் விசாரணைக்காக நிறுத்திவைக்கவில்லை.

//உண்மை நகல்//

K R PADMA KUMARI
Digitally signed by K R PADMA KUMARI
Date: 2026.04.02 15:56:12 +0530

**23 வது பெருநகர குற்றவியல் நடுவர்,**
**சைதாப்பேட்டை, சென்னை – 15.**